சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.3**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தேவதாஸ் | கிராமம் : | |
| த/பெ : | துரைசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் திருச்சி சிந்தாமணியில் குடியிருந்து கடையில் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு திருச்சியை சேர்ந்த பாப்பம்மாளை தெரியும். அவர் அரிசி வியாபாரம் செய்துவந்தார். அவர் உயில் எழுதி வைத்திருந்தார். அவர் எழுதி வைத்த உயிலில் நான் சாட்சி கையொப்பம் செய்திருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-4-ல் உயிலில் உள்ள இரண்டாவது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி உயிலில் என்னை தவிர வேறு நபரும் சாட்சி கையெழுத்து செய்தார். மேற்படி பி.வா.சா.ஆ-4ல் இன்னார் என்று நிரூபித்தார் என்கின்ற பகுதியிலும் கையெழுத்து செய்தேன். மேற்படி பி.வா.சா.ஆ.4ல் பாப்பம்மாள் கையெழுத்து செய்தார் , கைரேகையும் வைத்தார். மேற்படி பாப்பம்மாள் கையெழுத்து செய்ததை நான் நேரடியாக பார்த்தேன். நான் கையெழுத்து செய்ததை மேற்படி பாப்பம்மாள் பார்த்தார். மற்றொரு சாட்சி கையெழுத்து செய்ததை பாப்பம்மாள் பார்த்தார். மேற்படி பாப்பம்மாள் கையெழுத்து செய்ததை மற்றொரு சாட்சியும் பார்த்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-4ல் பாப்பம்மாள் கையெழுத்து உள்ளது. பி.வா.சா.ஆ-4ல் உள்ள பாப்பம்மாள் புகைப்படம் மற்றும் கைரேகை உள்ளது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்பட்ட பி.வா.சா.ஆ-4 உயிலானது எந்த ஆண்டு எழுதப்பட்டது என்றால் 2019ம் ஆண்டு எழுதப்பட்டது, தேதி, மாதம் தெரியாது. எந்த சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.4 ஆவணம் எழுதப்பட்டது என்றால் கடை என்று சொன்னார்கள். பி.வா.சா.ஆ-4ல் கண்டுள்ள சரத்துக்களை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பாப்பம்மாள் என்பவரை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் உயில் எழுதுவதற்கு முன்னார் இரண்டு , மூன்று ஆண்டுகளாக தெரியும். பாப்பம்மாள் தான் என்னை அழைத்ததன் பேரில் நான் கையெழுத்து செய்தேன். பாப்பம்மாள் உயில் எழுதுவதற்கு முன்னர் சொத்து சம்பந்தமான ஆவணங்கள் எதனையும் காண்பிக்கவில்லை.

ஐந்தாவது பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.